ஒட்டுமொத்தமாக 1975ஆம் ஆண்டில் தமிழகத்திலே எத்தனை தொழுநோயாளிகள் என்று பார்த்தால் டோட்டல் பிரிவெலன்ஸ், சில மாவட்டங்களிலே 23, 24, என்றும், சில மாவட்டங்களிலே 27,28 என்றும், சில மாவட்டங்களிலே 16, 18 என்றும் ஆயிரத்திற்கு இருக்கிறது. தமிழகம் பூராவும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 1975 ஆம் ஆண்டு 20.3 ஆக இருந்தது. இப்போது 14.3 ஆக— ஹோல் ஸ்டேட், ஸ்டேட் வைடாகப் பார்த்தால்— குறைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் தர்மபுரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 20 ஆக இருந்தது இப்போது 10 ஆக இருக்கிறது. டோட்டலாக கணக்குப்போட்டு பார்க்கிற நேரத்திலே எத்தனை நோயாளிகள் என்று எல்லாம் மானியக் கோரிக்கை விவாதம் வந்த போது நான் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறேன்.

தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கை.

*வினா எண் 714.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை ?

(ஆ) தனியார் வசம் உள்ள வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1,198 வழித்தடங்கள்.

(ஆ) 3,771 வழித்தடங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசு தேசியமாக்கிய பிறகு எத்தனை வழித்தடங்களில் எத்தனை மைல்கள் அரசு பேருந்துகளை விட்டிருக்கிறது ? தேசியமயமாக்குவதிலே இந்த அரசின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எத்தனை மைல்கள் என்ற கணக்கு இல்லை. அரசாங்கத்தினுடைய அடுத்த நிலை என்ன என்று கேட்டார்கள். தேசியமயமாக்கவேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை. படிப்படியாக அதைச் செய்துகொண்டிருக்கிறோம். இதிலே முதல் நிலை, இரண்டாவது நிலை என்று இல்லை. படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம்.